# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**STC 783/2025**

**Deposition of Witness for : PW4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திருப்பதி** | Caste | : | |
| Father/Husband Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( all Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 05.03.2026**

**முதல்விசாரணை**

நான் தற்போது உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சார்பு ஆய்வாளர் முருகன்அவரையும் அவரது கையொப்பத்தையும் எனக்கு தெரியும். நான் அவர்களுக்காக ஆவணங்களை பார்த்து, சாட்சி சொல்கிறேன். கடந்த 22.10.2025ஆம் தேதி 11.005 மணிக்கு சார்பு ஆய்வாளர் முருகன் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது, புகார்தாரர் அஜய் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 149/2025 பிரிவுகள் 191(2),191(3),296(b),118(1),351(3) BNS actன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ. 2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே 12.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, சாட்சிகள் பூமி, பாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **(அ.சா.ஆ. 3 மற்றும் 4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர்

சாட்சிகள் அஜய், ஆனந்த், ராமன், தொத்தகாளை, வெள்ளைதுரை ஆகியோர்களைளயும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 02.11.2025ம் தேதி எதிரிகளை காரணம் கூறி கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். புகார்தாருக்கு கிசிச்சை அளித்த மருத்துவர் சின்னா என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். அந்த காயச்சான்று **(அ.சா.ஆ.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் சட்டப்பிரிவில் மாற்றம் செய்து பிரிவுகள் 296(b),115(2),351(3) BNS actன் படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறுதியாக சம்பவம் உண்மையென தெரியவந்ததால், எதிரிகளின் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றல் சரியல்ல. சம்பவ சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவரபுலண்விசாரணை செய்யாமல், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு, இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.